Registeardas a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா 5-00

யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 01 (14-03-1992) சனிக்கிழமை ஓசை: 25

## 100 இலங்கைத் தமிழர்கள் அல்பேனியாவில் அவதி

(கொழும்பு)

தங்குமிடவசதியும், போதிய உணவு வசதியுமின்றி சுமார் நூறு இலங்கைத் தமிழர்கள் அல்பேனிய நாட்டில் அவதிக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிகின்றது. ஆண்களும், பெண்களும் அடங்கிய இக்குழுவினர் ஐரோப்பாவில் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தோடு ஏஜன்சிக்காரர்களால் அழைத்துச் செல்லப்பட்டனர் எனவும் தெரிய (6 ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்ற தெரிவுக் குழு யாழ்ப்பாணம் வரலாம்

## இரு வாரம் கட்டாய லீவு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கஊழியர்கள் மற்றும் சர்வதேசபிரதிநிதிகளுக்கு ( 6ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை மூலம் புலிகள் அனுமதி

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்சினை சம்பந்தமாக அரசியல் தீர்வு பற்றி ஆராய்ந்து வரும் பாராளுமன்ற தெரிவுக்குழு சமாதான நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு விரைவில் யாழ்ப்பாணம் வரலாமென நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

பாராளுமன்ற தெரிவுக் குழுவினர் யாழ்ப்பாணம் வருவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் அனுமதி வழங்கியிருப்பதாகவும சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக இந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இந்த வட்டாரங்கள் மேலும தெரிவித்தன.

''சமாதானத்திற்கான கதவுகளை எமது தலைவர் பிரபாகரன் திறந்துவிட்டிருக்கிறார். இந்த சமாதான சமிக்ஞையை கருத்தில் எடுத்து தென்னிலங்கையிலிருந்து இங்குவரும் சமாதான நல்லெண்ணத் தூதுக்குழுக்களை நாம் வரவேற்போம். பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் இங்கு வந்து எமது மக்களின் நிலைமையை நேரில் கண்டறிவதுடன் புலிகளையும் சந்தித்துப்பேசலாம். அரசுடனான தொடர்புகள் அனைத்தும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாகவே மேற்கொள்ளப்படுகிறது. இவ் விவகாரத்தில் தனிநபர்களின் உதவியை நாம் நாடவில்லை'' இவ்வாறு புலிகளின் பேச்சாளர் ஈழநாதத்திற்குக் கூறினார்.

## கிறிஸ்தவ தூதுக்குழு அரச அதிபர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வொன்றைக்காணும் நோக்குடன் யாழ்நகர் வந்துள்ள கிறிஸ்தவ நல்லெண்ணத்தூதுக்குழுநேற்றுயாழ்.அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரைச் சந்தித்து உரையாடியது.

இக் குழுவினருடனான சந்திப்பின் போது, அரசாங்க அதிபர் தமிழ் மக்கள் இன்றைய சூழ்நிலையில் எதிர் நோக்கும் பிரச்சினைகள், போக்குவரத்து சீரின்மை, தலைமையகம் அனுமதித்த ( 6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் விளை நிலங்கள் சிங்களவரால் அபகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறைப் பகுதிகளில் தமிழ் மக்களுக்குச் சொந்தமானபெருமளவுவிளை நிலங்கள் சிங்கள, முஸ்லிம் மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிங்கள முஸ்லிம் மக்கள் நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் அங்கிருந்து விரட்டப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசங்களில் சில பகுதிகளில் தமிழரால் செய்கை பண்ணப்பட்ட வயல்களில் (6 ஆம் பக்கம் பார்க்க)

## டாக்டர் சிவகுமாரன் சாட்சியமளிக்க பின்னடிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாக ஆஜராக டாக்டர் சிவகுமாரன் கடைசி நேரத்தில் மறுப்பு தெரிவித்துவிட்டதாககொழும்பில்செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாக கடந்த புதனன்று ஆஜராவார் என்று எதிர்பார்க்கப் பட்ட டாக்டர் சிவகுமாரன் (6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் பற்றி இந்தியா தகவல் கோருகிறதாம்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் புலிகளைச் சம்பந்தப் படுத்தியிருக்கும் இந்திய அரசு புலிகள் தலைவர் பிரபாகரன் குறித்த விபரங்களை முறைப்படி தம்மிடம் கையளிக்குமாறு சிறிலங்காவைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

பிரபாகரன் எங்குள்ளார் அவர் பற்றிய தகவல்கள் என்ன, அவரின் துணையாளர்கள் குறித்த விபரங்கள் பற்றி முன்னதாக இந்தியா கொழும்பைக் கேட்டுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

பிரபாகரன் குறித்த விபரங்களைக் கோரும் இந்திய அரசின் கோரிக்கையை சிறிலங்கா அரசு வழக்கறிஞர் சுனில் டி. சில்வாவிடம் ஒப்படைத்துள்ளதாக அரசு தரப்பில் கூறப்படுகிறது.

## வவுனியா - புளியங்குளம் மீது அகோர விமானக் குண்டுவீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டம் புளியங்குளம் பகுதியில் நேற்று மூன்று குண்டு வீச்சு விமானங்கள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்று நண்பகல் 11 30 மணியளவில் இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் அப்பகுதியிலிருந்த வீடொன்று சேதமடைந்தது.

இதேவேளை குமிழமுனைப் பகுதியில் சிறிலங்கா உலங்குவானூர்தி ஒன்று இரண்டு வாகனங்களைநோக்கி சரமாரியான துப்பாக்கி பிரயோகத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

## யாழ். பாடசாலைகளில் தமிழீழ தாயகப் படம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளில் இம் மாதம் 19ஆம் திகதி காலை 9 மணிக்கு தமிழீழ தாயகப்படம் திரை நீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது. இது 4 அடி நீளம் 3 அடி அகலம் கொண்டதாக ஆசிரியர்களால் வரைந்து பூர்த்தியாக்கப் பட்டுள்ளது. இந்த படம் மாணவர்கள் முன்னிலையில் அதிபர் ஆசிரியர்களால் திரை நீக்கம் செய்துவைக்கப்படும்.

அத்துடன் தமிழர்களின் பாரம்பரிய பிரதேச வரலாற்றுக் குறிப்புகள், பொருளாதாரக் குறிப்புகள், குடியேற்றப் புள்ளிவிபரங்கள், அரசியல் நோக்குகள், பிரதேசங்கள் குறிக்கப்பட்ட தாயகபட விளக்கம் என்பவற்றை உள்ளடக்கிய ''நம்நாடு தமிழீழம்'' என்னும் கைநூலும்அன்றைய தினம் வெளியாக உள்ளது.

ஏனைய மாவட்டங்களிலும் தாயகப் படம் வரையும் பணி துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

## திருமலை - தம்பலகாமம் வீதியில் துரித சிங்களக் குடியேற்றம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை - கம்பலகாமம் பிரதான வீதியின் இருபக்கமும் உள்ள தமிழ் மக்களின் நிலங்களில் துரித சிங்கள குடியேற்றம் ஏற்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு இறுதிவரை எழுபது சதவீதமான நிலங்கள் சிங்கள குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளன.

இப்பொழுது இறால்குளி, உப்பாறு, ஆலங்கேணி பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பகுதிகளில் இராணுவ முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன. ஆலங்கேணியில் ஒரு பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் வாழ்ந்துவந்த தமிழ் மக்கள் 1990இல் ஏற்பட்ட இராணுவ வன்முறையினால் இடம்பெயர்ந்து கம்பலகாமம் சிவன் கோயிலில் தங்கியுள்ளனர். இவர்களை சொந்த இடங்களுக்கு செல்ல விடாது சிறிலங்கப் படையினர் தடுத்து வைத்துள்ளனர்.

## 'களத்தில் நின்று வேங்கைகள்'

(நமது நிருபர்)

யாழ் தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிடும் 'களத்தில் நின்று வேங்கைகள்' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாநாளைஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மகளிர் படைப்பிரிவு தளபதி ஜெயந்தியும், யாழ். மாவட்ட தளபதி செந்தாளனும் மங்கல விளக்கேற்றி விழாவினைத் தொடக்கி வைக்க ( 6ஆம் பக்கம் பார்க்க)

## வரட்சி காரணமாக வேலை நாட்கள் குறைப்பு

(மாத்தளை)

மாத்தளை மாவட்டத்தில் நிலவி வரும் கடும் வரட்சி காரணமாகஇம்மாவட்ட அரச தனியார் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நாட்கள் குறைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான தோட்டப் பகுதிகளில் வாரத்தில் மூன்றுநான்கு நாட்கள் மட்டுமே வேலை வழங்கப்படுகிறது.

கிராமப்புறதோட்ட உரிமையாளர்களும் வரட்சி காரணமாக தொழிலாளர்களுக்கு தொழில் வழங்க மறுத்து வருகின்றனர். இதனால் தற்போது இம்மாவட்ட தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இதேசமயம்தம்புல்ல,நாவுல கலேவெல பகுதி கிராமவாசிகளும் கடும் வரட்சி காரணமாக விவசாயத்தைக் கைவிட்டுள்ளனர்.

## வரி விளம்பரம்

### சிறுகதை எழுத

''சிறுகதை எழுத விரும்புவோர்க்கு எனது பட்டறிவுக் குறிப்புகள்'' - வரதர் எழுதியது. ரூபா 18/- எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம் (2289)

### விடுகதைகள்

புத்தகக் கடைகள் ஏறி இறங்கிக் கால் நோகிறதா? மீண்டும் வெளிவந்துவிட்டது. ''நொடியும் விடையும்'' பாகம் II மூன்று பாகங்களையும் வாங்கிக் கால்நோமாறும் வரை வீட்டிலிருந்து படித்தால் உங்களுக்கு ஆயிரம் ரூபா பரிசும் கிடைக்கும் முடிவு இம்மாதம் முப்பத்தொராம் திகதி தொகுப்பாசிரியர்:'கோப்பாய் சிவம்' (2278)

### கல்வி

ENGLISH GRAMMAR SPOKEN ENGLISH முதலிருந்து 3 மாத ஆங்கிலப்பயிற்சி அளிக்கப்படுகிறது.
V. N. Kandasamy A. I. B. Part I (London) Inter (London)
87, திருநெல்வேலி றோட், கொக்குவில். (2291)

### தவறிவிட்டது

நவசிவாயம் லஷ்மி அவர்களின் அடையாள அட்டை (இல. 46, 5352868 v) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தல்லையபுலம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி என்ற விலாசத்தில் சேர்ப்பிக்கவும். சன்மானம் வழங்கப்படும். [2293]

## க.பொ.த (சா/த) செயல் முறைப் பரீட்சை

1991 டிசெம்பர் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை கர்நாடக சங்கீத, பரதநாட்டிய செயல்முறைப் பரீட்சைகள் 1992-03-20ம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதையும் பாடசாலைகளிலிருந்து விண்ணப்பித்த பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை அதிபர்கள் 1992 - 03 - 17ஆம் திகதி முதல் இத்திணைக்களத்திலிருந்து பெற்று பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கும்படியும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன என்றும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் செயல்முறைப் பரீட்சை பாடசாலைப் பரீட்சார்த்திகளின் செயல்முறைப்பரீட்சைகளைத் தொடர்ந்து நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

### நாய்களுக்குத் தடுப்பூசி போடுதல்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் உள்ள நாய்களுக்கு எதிர்வரும் 16-03-92 முதல் 30-03-92 வரை விசர்நோயைக் கட்டுப்படுத்தும் தடுப்பூசிபோடும் செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. தடுப்பூசி போடுவதற்காக நாய்களை கொண்டுவர வேண்டிய இடங்கள் பற்றி அவ்வப்பகுதி மக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் தரப்படும். இத்திட்டம் வெற்றிபெற பொதுமக்கள் அனைவரும் எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
13-03-1992. (சி/4050)

## அறிவித்தல்

## மொத்த விற்பனை

கீழ்க்காணும் பொருள்களை மொத்தமாக கொள்வனவு செய்து விற்பனவு செய்ய விரும்பும் தனியார் கூட்டுறவு நிறுவனங்கள் வசதியான கொத்தணி அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

### பொருள்கள்

★ பனை வெல்லம்
★ பனம் சீனி
★ பனம் கல்லாக்காரம்
★ பனம் உணவுப் பொருள்கள்
★ பனம் கைப்பணிப் பொருள்கள்
★ குளிர் பானங்கள்
★ புழுக்கொடியல்

தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகங்கள்;

1. பொதுமுகாமையாளர்,
தென்மராட்சிப் பகுதி தெ.ப.பொ.கூ. சங்கங்களின்
கொத்தணிஅலுவலகம், கச்சாய்வீதி, கொடிகாமம்.

2. பொதுமுகாமையாளர்,
வடமராட்சி பகுதி தெ. ப. பொ. கூ. சங்கங்களின்
கொத்தணி அலுவலகம், மந்திகை-புலோலி,
(முன்னைய இலங்கை வங்கி கட்டடம்)

3. பொதுமுகாமையாளர்,
வலிகாமம் பகுதி தெ. ப. பொ. கூ. சங்கங்களின்
கொத்தணி அலுவலகம்,-பிரதானவீதி, சங்கானை.

4. பொதுமுகாமையாளர்,
யாழ் பகுதி தெ. ப. பொ. கூ. சங்கங்களின்
கொத்தணி அலுவலகம்,
இல, 370, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

| விசேட விலைகுறைப்பு | மொ.வி | சில்.விலை |
|---|---|---|
| பனை வெல்லம் 1 கிலோ | 38/- | 40/ |
| பனம் சீனி 1 கிலோ | 38/- | 40/- |

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்
499, கே. கே. எஸ். வீதி - யாழ்ப்பாணம்.

சி/4039


DHL உங்கள் கடிதங்களை
பாதுகாப்பாக உலகம் முழுவதும்
எடுத்துச் செல்கிறது !

உங்களின் நண்பன்
DHL தபால் சேவை

**D. H. L. INTERNATIONAL**
C/o Cosmos Marketing Services
120, (200) K. K. S. Road,
Jaffna.

DHL WORLDWIDE EXPRESS

(சி/4014)


# புலிகளுடன் பேசுவதை சுத: கட்சி எதிர்க்கவில்லை

## அனுராபண்டாரநாயக்கா

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதை சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கவில்லை என்று திரு. அநுரா பண்டாரநாயக்கா கூறியுள்ளார். பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய திரு. அநுரா பண்டாரநாயக்கா மேலும் கூறுகையில், யுத்தத்தை நாம் விரும்பவில்லை எனவும், பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முடிவை ஏற்றுக் கொள்வோம் எனவும் தெரிவித்தார்.

## நினைவு கூருகின்றோம்

## 1992-03-14

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார், முருங்கன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் வீரச்சாவெய்திய-

★ **பாண்டியன்** (செபமாலை நிக்கலஸ் -வட்டக்கண்டல், மன்னார்)

திருக்கோணமலை, கந்தளாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதாகி கொலை செய்யப்பட்ட.

★ **கிட்ணன்** (சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை -கதிரவெளி, வாகரை மட்டக்களப்பு)

1986 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

★ **பரமேஸ்** (பரமேஸ்வரன்-கள்ளிச்சை, வடமுனை)

1986 ஆம் ஆண்டு பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பரந்தன் 3 ஆம்வாய்க்காலைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1988 ஆம் ஆண்டு சுழிபுரத்தில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது தன்னைத் தானே சுட்டு வீரச்சாவெய்திய-

**லெப் குலம் /முரளி** (மயில்வாகனம் முரளி -கிருஸ்ணன் - 'தணிகை' நெல்லியான் வீதி; சுழிபுரம் மேற்கு.)

இதே சம்பவத்தின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**அம்மான் / நேசன்** (வினாசித்தம்பி சிவகுமாரன் -சுழிபுரம்.)

தண்ணிமுறிப்பு, களிக்காட்டுப் பகுதியில் இருந்த எமது முகாமொன்றின் மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**கப்டன்-வாதவூரன்** (தம்பையா யோகேஸ்வரன் -கிளிநொச்சி.)

1989 ஆம் ஆண்டு புங்கன்குளம் சந்தியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய-

**நவநீதன்** (நவரத்தினம் நவநீதன் -77/4 புங்கன்குளம் வீதி, அரியாலை)

கோண்டாவில், குமரகோட்டம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய.

கோண்டாவில் பிரதேசப் பொறுப்பாளர்

**2 ஆம் லெப். சாந்தன்** (தர்மலிங்கம் மோகன் -கோண்டாவில் மேற்கு)

**லெப். சாள்ஸ்** (ஞானசேகரம் ஞானசொரூபன் -சாள்ஸ் வீதி, நெட்டிலைப்பாய், கோண்டாவில்)

**பிரதாப் /குட்டி /பிறேம்** (தங்கராசா பிறேமானந்தன் -கோண்டாவில் வடக்கு)

காரைநகரில், இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**முஸ்தபா** (செபமாலை செபஸ்தியாம்பிள்ளை -நெடுந்தீவு)

இதே பகுதியில், இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**பரமேஸ்** (ச. பரமேஸ்வரன்-நெடுந்தீவு)

பளைச்சந்தியில் பேருந்தில் வைத்து இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு புலிபாய்ந்தகல்லில் சிறிலங்காப் படையினருடான மோதலில் வீரச்சாவெய்திய-

**விமல்** (த. பிரபாகரன் - பொத்துவில் அம்பாறை.)

முறக்கொட்டாஞ்சேனையில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**லெப். மணி** (கந்தையா சேனாதிராஜா -சந்திவெளி மட்டக்களப்பு.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி**

(சி/4045)

# அணு ஆயுதமற்ற தென்னாசியா இந்தியா வலியுறுத்துகின்றது

(லண்டன்)

தென்னாசியாவை அணு ஆயுத பாதுகாப்பு பிராந்தியமாக ஆக்குவதற்கு உதவிடுமாறு சீனா ரஷ்யா பாகிஸ்தான் இஸ்ரேல் ஆகிய நாடுகளை வற்புறுத்துமாறு அமெரிக்காவை இந்தியா கேட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் கோரிக்கையை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர் ஜே. என் டிக்சித் விடுத்தார். லண்டனில் உள்ள போர் முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதங்களின் ஆராய்ச்சிக்கான சர்வதேச மையத்தில் இவர் உரையாற்றினார்.

அணு ஆயுதக் கட்டுப்பாடு குறித்து ஐந்து நாடுகளுக்கிடையே மாநாடு நடத்தப்படுவதற்கு முன்னால் இந்தப் பிராந்தியத்து நாடுகளுக்கிடையே நம்பிக்கை யூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தம் பாரபட்சமானது என்பதாலேயே இந்தியா அதனை எதிர்த்தது என்றும் கையெழுத்திடவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அயல் நாடுகளுடனான இந்தியாவின் உறவுகள் குறித்துப் பேசிய டிக்சித் இந்தியாவின் பிணைப்புக்களில் குறிப்பிடத்தக்க மேம்பாடு இருப்பதாக தெரிவித்தார்.

இதே நேரம் வாஷிங்டனில் பி.சி.ஐ செய்திஸ்தாபனத்திற்கு அளித்துள்ள பேட்டியொன்றில் இந்தியாவும் அமெரிக்காவும் கூட்டாக இணைந்து இந்துமா கடலில் கடற்படை பயிற்சி நடவடிக்கைகளை நடத்தப் போவதாகவும்.

இந்தியாவும் அமெரிக்காவும் இன்னும் எட்டு வார காலத்தில் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தும் என்றும்,

ஐந்து வல்லரசுகளிடையே நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் பேச்சுக்களில் இந்தியா பங்கு பற்றாமல் நடைபெறாது என்றும்,

இந்தப் பேச்சுக்களின் வருங்காலம் இந்திய - அமெரிக்க இருதரப்புப் பேச்சுக்கள் எந்த வகையில் முன்னேறுகின்றது என்பதைப் பொறுத்தே நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

## டிராம் விபத்தில் 11 பேர் பலி

(ஸ்டாக்ஹோம்)

சுவீடனில் மிக மோசமான டிராம் விபத்து ஒன்றில் குறைந்தது பதினொரு பேர் பலியாகினர். இருபது பேர் படுகாயமுற்றனர்.

சுவீடிச் துறைமுக நகரொன்றிலிருந்து சென்று கொண்டிருந்த டிராம் வண்டி மலைச் சரிவு ஒன்றில் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் இவ் விபத்து நேரிட்டுள்ளது.

## ஏப்பிரல்-9 பிரிட்டன் பொதுத் தேர்தல்

இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் வரும் ஏப்பிரல்9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இங்கிலாந்துப் பிரதமர் ஜோன்மேயர் இந்த அறிவித்தலை கடந்த வாரம் வெளியிட்டார். பதின்மூன்று ஆண்டுகள் தொடர்ந்து கன்சவேட்டிவ் கட்சி ஆட்சியிலிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## சோவியத் விஞ்ஞானிகளுக்கு வேலை வாய்ப்பளிக்க ஆறு கோடி டொலர் ஒதுக்கு

[பிரஸல்ஸ்]

சோவியத் அணு விஞ்ஞானிகளை வேலைக்கமர்த்தி மூன்றாம் உலக நாடுகளுக்கு விஞ்ஞானிகளது அணு ஆயுத செய்முறை கிடைக்காது செய்வதற்கென முன் வைக்கப்பட்டுள்ள திட்டத்திற்கு ஆறு கோடி டொலர் செலவிட மேற்குநாடுகள் முன்வந்துள்ளன.

சோவியத் விஞ்ஞானிகளின் உதவி பிற நாடுகளுக்குக் கிடைத்தால் அதனால் மேற்கு நாடுகள் வருந்த நேரிடுமென ஜேர்மன் விஞ்ஞான அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வறுமை காரணமாக சோவியத் சிரேஷ்ட விஞ்ஞானிகள் தங்களது அறிவுத் திறனை பதற்ற நிலையிலுள்ள நாடுகளுக்கு விற்று விடாது தடுப்பதே மேற்கு நாடுகளின் முயற்சியெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தெலுங்கு தேசம் கட்சி இரண்டாகப் பிளவு

(டில்லி)

தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த எட்டு லோக்சபா உறுப்பினர்கள் தங்கள் குழுதான் மெய்யான தெலுங்கு தேசக் கட்சியென உரிமை கொண்டாடுவதை அடுத்து தெலுங்கு தேசக் கட்சி இரண்டாக பிளவுபட்டு விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

தங்களை தனியான ஒரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களாக அங்கீகரித்து அதற்கேற்றபடியே தங்களுக்கு சபையில் இருக்கைகளை ஒதுக்குமாறு அந்த எட்டு லோக்சபா எம்.பி.க்களும் சபாநாயகர் சிவராஜ்பாட்டீலிடம் கேட்டிருக்கின்றனர்.

இக் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தெலுங்கு தேச பாராளுமன்ற நிர்வாகக்குழுத்தலைவராக விஜயகுமார்ராஜூ புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போது;

''கடந்த செவ்வாய்க்கிழமை புதுடில்லியில் நடைபெற்ற தெலுங்கு தேசக் கட்சித்தலைவர்களின் கூட்டமொன்றில் கட்சிப் பிளவு பட்டுப் போனதாக தெரிவித்தார்.''

## தேயிலை விலை வீழ்ச்சி பொருளாதார நெருக்கடி

தேயிலை விலைதொடர்ந்து வீழச்சி அடைந்து, வரட்சியும் தொடர்ந்து நீடிக்குமேயானால் இவ்வருடநடுப்பகுதியில் இருந்து இலங்கைப் பொருளாதாரம் பாரதூரமான நெருக்கடிக்குள்ளாகும் என்று திறைசேரியின் சிரேஷ்ட பொருளியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனால் ஜூன் மாதமளவில் பண நெருக்கடியை எதிர்நோக்குவதுடன் வரட்சி நிவாரணத்துக்கும் அதனுடன் இணைந்தசெலவினங்களுமாக 30 கோடி ரூபா தொடக்கம் 40 கோடி ரூபாவுக்கு இடைப்பட்ட பணத்தை அரசாங்கம் கூடுதலாக செலவு செய்ய வேண்டிவரும்எனவும் தன்னை இனங்காட்டிக் கொள்ள மறுத்த அந்த பொருளியலாளர் தெரிவித்தார்.

தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்தி வீழ்ச்சியினாலும் இதேயளவு தொகையை அரசாங்கம் இழக்க வேண்டியிருக்கும் என்வும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு கிலோ தேயிலையின் விலை 1.40 டொலரிலிருந்து 1.20 டொலராக குறைந்திருக்கிறது தேயிலையின் குறைந்த தரமும் விலை வீழ்ச்சிக்கு ஒரு காரணம். முன்னைய சோவியத்யூனியன், ஈராக் போன்ற இலங்கைத் தேயிலையை கூடுதலாக வாங்கும்நாடுகளும் இப்போது இல்லை எனவும் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கடைகளில் திருட்டு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரில் ஒரே இரவில் இரு கடைகள் கூரை பிரிக்கப்பட்டு சுமார் 20,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

வெற்றி சைக்கிள் வேக்ஸ், ரதி ஸ்ரோஸ் ஆகிய இரு கடைகளிலுமே இக்கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன. வெற்றி சைக்கிள் வேக்ஸில் பெற்றோல், ஒயில், கண்டொஸ், சிகரட் உட்பட சுமார் 10,000 ரூபாவும் ரதி ஸ்ரோர்ஸில் சில்வர் பொருள்கள், பணம் உட்பட சுமார் 10,000 ரூபாவும் கொள்ளையடிக்கப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இக் கொள்ளைகள் தொடர்பாக காவல் துறையினர் விசாரணை செய்து வருகின்றனர். (25)

## ஜோர்ஜியாக் குடியரசின் உயர் ஆட்சி சபை தலைவராக ஷெவர் நாட்ஸே நியமனம்

முன்னாள் சோவியத் வெளிநாட்டமைச்சர் எவொட் ஷெவர்நாட்ஸே ஜோர்ஜியாக் குடியரசின் உயர்தர ஆட்சிக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏழு ஆண்டுகள் மொஸ்கோவில் கழித்த ஷெவர் நாட்ஸே, சென்ற வாரம் தனது தாயகமான ஜோர்ஜியாவிற்குத் திரும்பியதை தொடர்ந்து ஜோர்ஜியா இராணுவசபை இவரது நியமனம் பற்றிய பிரகடனத்தை வெளியிட்டது.

ஜனாதிபதி கம்ஸா குர்டியா அகற்றப்பட்ட பின்பு இந்த இராணுவ சபையே இதுவரை ஆட்சியில் இருந்தது.

ஜோர்ஜியாவில் புதிய தேர்தல் நடைபெறும் போது தாம் பாராளுமன்றத்திற்குப் போட்டியிடப் போவதாக ஷெவர் நாட்சே குறிப்பிட்டுள்ளார்.

## கொர்பசேவின் அமெரிக்க சொற்பொழிவுச் சுற்றுலா

(புல்டன்)

முன்னாள் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் இரு வாரகால சொற்பொழிவினை ஆற்றுவதற்காக அமெரிக்கா செல்லவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மே மாத ஆரம்பத்தில் அமெரிக்கா செல்லவிருக்கும் கொர்பசேவ் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான றேகன், காட்டர் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

கொர்பசேவின் சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்யும் அமெரிக்க கொர்ப்பசேவ் பவுண்டேஷனைச் சேர்ந்த மார்த்தா டொன்சிக் இது பற்றிக் குறிப்பிடுகையில் ''கொர்பசேவ் மே 1 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை கலிபோர்னியா, இல்லினோஸ், சிக்காக்கோ, நியூயோர்க் மஸாசுஸெட்ஸ் உட்பட பல்வேறு அமெரிக்க மாநிலங்களில் சொற்பொழிவாற்ற இருப்பதாக தெரிவித்தார். இந்தச்சொற்பொழிவுகளுக்கு கொர்பி எவ்வளவு பணம் பெறுவார் என்பதை கூற அவர் மறுத்துவிட்டார்.

கொர்பியின் உரை வெஸ்ட்மினிஸ்டர் கல்லூரியில் 1946 ஆம் ஆண்டு சேர்ச்சில் நிகழ்த்திய உரையின் முடிவுரையாக கெடுபிடி யுத்தத்திற்குப் பிற்பட்ட புதிய உலகைப் பற்றியதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

''பால்டிக்கிலுள்ள ஸ்டெட்டின் முதல் அட்ரியாட்டிக்கிலுள்ள டிரிஸ்டி வரை இரும்புத்திரை ஒன்று இறங்கியுள்ளது'' என சேர்ச்சில் அப்போது கூறியிருந்தார்.

## ரஷ்யாவிடம் அணு ஆயு. அழிப்பதற்காக ஒப்படைப்புப் பணி நிறுத்தம்

(கீவ்)

தனது அணு ஆயுதங்களை ரஷ்யாவிடம் அழிப்பதற்காக ஒப்படைக்கும் பணியை உக்ரைன் தற்போது நிறுத்தி வைத்துள்ளது.

இவ் ஆயுதங்கள் அழிக்கப்படுமென்றும், மீண்டும் பயன்படுத்தப்பட மாட்டாதென்றும், ரஷ்யாவிடமிருந்து திட்டவட்டமான வாக்குறுதி ஒன்றை தமது நாடுபெற விரும்புவதாக உக்ரைன் அதிபர் கீவ்லில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 07 - 06 - 1969

வீரச்சாவு : 14 - 03 - 1989

### 2ஆம் லெப். மோகன்
### (தருமலிங்கம் சாந்தன்)

நஞ்சுண்ட நீலகண்டனைப் பாட
ஒரு புராணமுண்டு
எனில்,
நாட்டிற்கென நாட்டின் விடிவிற்கென
நாளாந்தம் நஞ்சுண்ணும் வீரர்களைப்
பாட எத்தனை கோடி புராணம் வேண்டும்?
மூன்றாண்டா?
இல்லையடா. என் வீரத்தின் வித்தே!
முந்தநாட் பதிந்ததென உன் சுவடு
இன்னமும் இறுகிக் கிடக்கிறது
எம் இதயத்தில்.

இவருடன் வீரச்சாவெய்திய லெப். சாள்ஸ், பிறேம் ஆகியோருக்கும் எமது வீர வணக்கங்கள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

பெற்றோர்,
உறவினர், நண்பர்கள்.

(சி4052)

## தீர்மானங்களை நிறைவேற்ற பக்தாத் தவறிவிட்டது

வளைகுடாப் போருக்குப் பின் பிறப்பிக்கப்பட்ட ஐ.நா. தீர்மானங்களை பாக்தாத் முழுஅளவிலும் நிபந்தனையற்ற விதத்திலும் நிறைவேற்றிவைப்பதற்குதவறி விட்டது என ஐ. நா. பந்தோபஸ்துச் சபை பாக்தாத்தின் மீது குற்றஞ் சாட்டியுள்ளது.

ஈராக் பற்றி நடத்தியதனது இரண்டு நாள் சிறப்புக்கூட்டத்தின் பின் ஐ நா.பந்தோபஸ்து சபை இதுதொடர்பான அறிக்கையொன்றை ஏகமனதாக நிறைவேற்றியது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஈராக்கின் துணைப் பிரதமர் தாரிக்அசீஸ், ஐ.நா. தீர்மானங்கள் அனைத்தையும் ஈராக் நிறைவேற்றி வருவதாகவும், ஐ.நா. கண்காணிப்பாளர்களுடன் ஈராக் நேர்மையான முறையில் ஒத்துழைத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

ஐ. தே. கட்சி — இ. தொ. காங்கிரஸ் அரசாங்கம்

# நாட்டின் நிதி நிலையை கருத்தில் கொள்வதில்லை

## நம்பிக்கையில்லா பிரேரணையில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

'ஐக்கிய தேசியக் கட்சி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கமானது இலங்கையின் கவலை மிகுந்த நிதி நிலைமையை கவனிக்காது வெளிநாட்டுப் பிரயாணம், சுற்றுலாத்துறை என்பவற்றில் சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ள மந்தப் போக்குகளையும் புறக்கணித்துசெயற்பட்டுள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளில் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்திற்கான அனுபந்தத்தில் இடம் பெற்றுள்ளன. திகதி குறிப்பிடப்படாத பிரேரணை முன்னறிவித்தல்களாகவே இவ்விரு பிரேரணைகளும் அனுபந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளன

அரசுக்கு எதிரானநம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோபண்டார நாயக்கா மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்தன ஐக்கிய சோசலிச முன்னணி எம்.பி. அதாவுத, செனவிரத்ன, சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி.க்களான தர்மசிறிசேன நாயக்க, சி. வி குணரத்ன, கமல் கருணாநாயக்க, ரிச்சாட் பத்திரன மற்றும் நவரத்தினம் ஆகியோர் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐ. தே. கட்சி-இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் அரசாங்கம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநம்பிக்கையில்லாப் பிரேரணைகளில் ஒன்றில் 1991 ஆகஸ்டில் ஐரோப்பியன் ஏயர் பஸ் இன்டஸ்ஸிடமிருந்து320-200, 340-300 ஆகிய மாதிரிகளைக் கொண்ட ஆறு ஏயர் பஸ்களைக் கொள்வனவு செய்வதற்கென எழுநூறு மில்லியன் அமெரிக்க டொலரை (29. 8 பில்லியன் ரூபா) செலவிட்டுள்ளது. என்றும், இது தற்போது உயர்ந்து செல்கின்ற தற்போதைய இலங்கை ரூபா வீதத்தில் செலவிட முடியாதது என்றும்,

1991 ஆம் 1992 ஆம் ஆண்டுகளில் தாழ்ந்து விட்ட ஏற்றுமதி விலைகளினாலும், உர மானியங்கள் மீளப் பெறப்பட்டதைத் தொடர்ந்து உற்பத்தி வீழ்ச்சியடைந்ததனாலும் பண வீக்கம் உயர்ந்ததோடு தாங்க முடியாத வாழ்க்கைச் செலவினாலும் இடர் நிலையிலுள்ள இலங்கையின் பொருளாதாரத்தில் கவனஞ் செலுத்த தவறியது என்றும்.

ஏனைய சகல அரசப் பொறுப்பு முயற்சிகளுக்கும் அரசாங்கத்தின் 'எல்லாவற்றுக்கும் பொருந்துகிற நிவாரணியான 'மீளமைப்பும் மீள் நிர்மாணமும்' என்ற கவனத்திலிருந்து அடுத்தடுத்து வந்த இந்த அரசாங்கங்களில்இருந்து தப்பியுள்ளதாகக் குறிப்பிடத்தக்கதாக தனித்து விளங்கும் ''ஏயர்லங்கா'' போன்ற நலிவுற்ற நிறுவனமொன்றிற்கான எழுநூறு மில்லியன் அமெரிக்க டொலர் முதலிடப்பட்ட போதிலும் இந்த விமானங்கள் அவற்றை வைத்திருப்பதற்கான உழைப்பைத்தானும் ஈட்ட முடியாதென்பதோடு வளர்ச்சியடையும் வர்த்தக கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு உதவும் வகையில் மேலதிகமாக ஏதும் ஈட்டமாட்டா என்பதனால் இக்கடனை இறுக்கும் சகிக்க முடியாத சுமையை இலங்கை மீது சுமத்தியுள்ளது என்றும்,

ஊழல், விரயம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை செய்து பொருத்தமான நடவடிக்கை எடுக்க இந்த இரு அரசாங்கங்களும் தவறி, மேலும் ஊழலையும், விரயத்தையும் தூண்டியுள்ளது என்றும்,

இக்கட்சிகள் குறிப்பிட்டு ஆகவே மேற்படி அரசாங்கத்தின் மீது முழு நம்பிக்கையையும் இச்சபை இழந்துள்ளது என்று தெரிவித்துள்ளது

நிதியமைச்சர் மீதான இரண்டாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்னறிவித்தலில் கூறப்பட்டுள்ளதாவது:

பிரதம அமைச்சரும், நிதி அமைச்சருமாகிய டி.பி விஜயதுங்கா, அமைச்சின் கீழ் முகாமை செய்யப்படும் மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியன முறிந்துள்ளபடியால் அவை கடன் அடைக்க முடியாத நிலையிலுள்ளன என்று இந்த இரு அரச வங்கிகளையும் வர்த்தகமயமாக்குதல் பற்றி குறிப்பிடும்போது தெரிவித்திருந்தார். ஆனால் இக் கருத்துக்கள் அவ் வங்கிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியன இவ்வாறு தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தத்தக்க கருத்துரைகளை இவர் வெளியிட்டமையினாலும்,

இவரது கருத்துக்களால், வர்த்தக நிதி வட்டாரங்களிலும், பங்குச்சந்தை வாடிக்கையாளர்களிடையேயும் ஒரு பதற்றமான, உறுதியற்ற நம்பிக்கையில்லாத நிலையைத் தோற்றுவித்ததனாலும்,

இவ்வாறு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியதன் மூலம் சர்வதேச வங்கித்துறையிலும் நிதிச் சமூகத்திலும் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும்,

இந்த இரு நிறுவனங்களையும் விரும்பிய தனியார்துறை முதலீட்டாளர்களுக்கு விற்பனை செய்வதற்கு வழி வகுக்கும் பொருட்டு வேண்டுமென்றே இக்கருத்துரைகள் தெரிவிக்கப்பட்டிருப்பதனாலும்,

இக்கருத்துரைகளை இச்சபை கண்டிப்பதுடன், நிதி அமைச்சர் இச்சபையின் நம்பிக்கையை இழந்து விட்டமையால் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கோருகிறது.

# இந்திய-சிறிலங்கா உறவுகள் புதிய சகாப்தத்தை எட்டும்

- ஹேரத்

[கொழும்பு]

இந்திய - சிறிலங்கா உறவுகள் புதியதொரு சகாப்தத்தில் தற்போது பிரவேசித்திருப்பதாக சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் கூறியுள்ளார். கொழும்பு கிராமோதயா மண்டபத்தில் தகவல் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் பேசுகையில் உலகில் ஏற்பட்டு வரும் துரித மாற்றங்களுக்கேற்ப சிறிலங்கா கொண்டிருக்கும் வெளி விவகாரக் கொள்கை பற்றி அமைச்சர் விளக்கிக் கூறினார்.

எவர்மீதும் பகைமை கொள்ளாமை, நட்புணர்வு என்பவற்றின் அடிப்படையில் வெளிநாட்டுக்கொள்கை அமைந்துள்ளது எனவும், கொழும்பில் நடைபெற்ற ஆறாவது சார்க் உச்சி மாநாடு அந்த இயக்கத்திற்கு புதிய தோற்றத்தைக் கொடுத்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

மேலும் அண்மைய சார்க் உச்சி மாநாட்டின் பின்னர் அயல் நாடுகளுடனான உறவு குறிப்பாக இந்தியாவுடனான உறவு விருத்திசெய்யப்பட்டுள்ளது எனவும், இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா, இந்தியப்பிரதமர் நரசிம்மராவுடன் நடாத்திய பேச்சுக்கள் இரு நாட்டு உறவுகளையும் பலப்படுத்த உதவியது எனவும் குறிப்பிட்டார். இதன் மூலம் கடந்த காலத்தில் நிலவிய தப்பபிப்பிராயங்கள் போக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் புதுடில்லியில் இவ்வாண்டின் ஆரம்பத்தில் நடைபெற்ற கூட்டு பொருளாதார ஆணைக்குழுவின் மாநாடும், சென்னையில் நடைபெற்ற இந்திய முதலீட்டாளர்களுடனான சந்திப்பும் வெற்றியளித்துள்ளன.

மேலும் இலங்கை இந்தியாவுடன் பலதுறைகளில் ஒத்துழைத்து வருகிறது. குறிப்பாக ராஜீவ்காந்திகொலை பற்றிய புலன்விசாரணைகளில் இந்திய விசேட புலனாய்வுக் குழுவுடன் நெருங்கிப் பணியாற்றி வருகிறது. இதுதவிர தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதும், இந்தியக் கடற்படை பாக்குநீரிணையில்கண்காணிப்பதும், இலங்கைப்படையினர் விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு உதவியாகவுள்ளது எனவும் தெரிவித்தார். அத்துடன் கச்சதீவுப் பிரச்சினையிலும் எமது நிலையை இந்திய மத்திய அரசு ஆதரிக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

## பெற்றுக் கொள்ளவும்

யாழ். ஆஸ்பத்திரி வீதி வனிக்கா மெடிகல்ஸில் சென்ற மாதம் 26 ஆம் திகதி கண்டெடுக்கப்பட்ட குறிப்பிட்ட தொகைப் பணம் எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## புதிய எம், பிகள் ஐ. தே. கட்சி தெரிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட எஸ். ஏ. முத்து பண்டா, ஆரியரட்ண ஜயதிலக ஆகிய முன்னாள் எம். பிக்களுக்குப் பதிலா ஜோன் சரத்சந்திர குணரத்னா (கம்பஹா) எச். எம் டி. டி. ஹேரத் (பொலநறுவை) ஆகிய இருவர் நியமிக்கப்பட்டனரென்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# வதிவிட வேளாண்மை போட்டி முடிவுகள்

(நமது நிருபர்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் பரிசு பெற்றவர்களின் விபரங்களை தமிழீழ ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ளது.

வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

### மாவட்டம்

செ. தயாபரன் [இணுவில், வடக்கு.கே. கே. எஸ் வீதி இணுவில்.] கி. சுகிர்தலிங்கம் [புலோலிவடக்கு, மந்திகை] வை: சரஸ்வதி [வித்தராஜன் தெற்கு, தாளையடி]

### வலிகாமம் பிரிவு:

வை: சாந்திகுமார் [உடையார் ஒழுங்கை. கொக்குவில், அ. ஆனந்தராஜா [கணேஸ் வீதி, சங்கானை]. ,க. இராமநாதன்[ நந்தன்வீதி இணுவில் மேற்கு]

### வடமராட்சிப்பிரிவு:

இ. செல்வகாந்தம் [நெல்லிஊானை, செம்பியன்பற்று ]வி பலாமணி [கெருடாவில் வடக்கு, கெருடாவில்.) ம புலேந்திரன் [கரணவாய் வடக்கு, வதிரி ]

### தென்மராட்சிப்பிரிவு:

பொ. நவரத்தினராசா [நுணாவில் மேற்கு, நுணாவில்.] புஸ்பராணி சுகுமார் [அல்லாரை வடக்கு, மீசாலை.] கு. தனபால சிங்கம் [முகாவில், இயக்கச்சி, முகாவில்.]

## கமநல சேவைப் பிரிவு வாரியாக

### புலோலி

சோதிலிங்கம் ஏகாம்பரநாதன் [பொலிகை ஊறணி, வல்வெட்டித்துறை.] [சண்முகம் தம்பிராசா [பொலிகை பத்திரகாளி கோவிலடி ] செ நடராசா [வதிரி, நெல்லியடி]

### ஆறுதல் பரிசுகள்

சிவபுண்ணியம் மயில்வாகனம் [வதிரி, நெல்லியடி வடக்கு.] அருமைச்சந்திரன் விஜயராணி [கெருடாவில், கொம்மாந்துறை ] சின்னத்துரை சாந்தலிங்கம் [கெருடாவில், கொம்மாந்துறை ] இ. சிவஞானம் [பொலிகை வீரபத்திரர் கோயிலடி.] நல்லதம்பி நாகலிங்கம்[கரணவாய் நொத்தாரிஸ் தோட்டம்.] சிவாம்பிகை ஜெயராசசிங்கம் [வதிரி, கரணவாய் வடக்கு.] சந்தவனம் நபாரத்தினம் [கரவெட்டி, அரசடி] கிறிஸ்தோபர் றோமன் அலோசியஸ் [கரவெட்டி, கன்பொல்லை ] தமயந்தி விக்கினேஸ்வரன் [கரவெட்டி, கன்பொல்லை வீதி.] கனகசிங்கம் புவனேந்திரன் [கரவெட்டி, துரையன் தோட்டம்.]

### அம்பன்

சி. செல்லமுத்து [மந்திகை, துன்னாலை வடக்கு.]க கனக சபாபதி [வதிரி, இலகடி,அத்தாய்.]சி செல்வநாயகம் [மந்திகை, புலோலி வடமேற்கு.]

### ஆறுதல் பரிசுகள்

பொன். பூரணம்பிள்ளை [வியாபாரிமூலை, பெரிய தெனி, வியாபாரிமூலை.] கணபதிப்பிள்ளை கந்தசபேசன் [வடகிழக்கு,அம்பன், குடத்தனை ] ப அருட்பிரகாசம் [மந்திகை, சவனாய் ] சபாரத்தினம் கனகநாதன் [வியாபாரிமூலை, கோயில் தோட்டம்,அல்வாய் வடக்கு.] இ. சிவனேஸ்வரி [மந்திகை அரசடி ஒழுங்கை, புலோலி.] க. தணிகாசலம் [மந்திகை, கேசனார்வீதி, புலோலி தெற்கு ] சு. தங்கராசா [வதிரி, இலகடி அத்தாய்.] சோ. அன்னலிங்கம்[மந்திகை, பிலத்தம்பை, புலோலி வடக்கு.] க. கந்தசாமி [வதிரி, செம்பாடு ஒழுங்கை, துன்னாலை மத்தி.] ச. சண்முகநாதன் [மந்திகை, செம்பாடு, துன்னாலை.]

### கைதடி

நாகமணி சண்முகம் [மறவன் கிழ. தனங்கிளப்பு, சாவகச்சேரி ] இளையதம்பி இராசையா [கைதடி வடக்கு.] கோபாலபிள்ளை துரையப்பா [கைதடி தெற்கு.]

### ஆறுதல் பரிசுகள்

சுந்தையா மகேந்திரன் [நாவற்குழி, கைதடி ] நாகமுத்து நாகலிங்கம் [மறவன் புலவு கிழக்கு, சாவகச்சேரி.] தில்லைநாதர் தங்கவேலு [மறவன்புலவு கிழக்கு, சாவகச்சேரி.] சேதுகாவலர் கந்தசாமி [கோயிலாக்கண்டி கைதடி.] கிருஷ்ணன் குகாந்தினி [கைதடி வடக்கு.] திருஞானசம்பந்தர் பகீரதன் [மறவன்புலவு கிழக்கு, சாவகச்சேரி ] தம்பு செல்லத்துரை [கைதடி வடக்கு. கைதடி ] தியாகராசா ரவிச்சந்திரன் [மறவன்புலவு மேற்கு, சாவகச்சேரி.] சோமலிங்கம் நடேஸ் [மறவன் புலவு கிழக்கு, சாவகச்சேரி.] சிதம்பரம் சுப்பிரமணியம் [கைதடி தெற்கு.]

### சாவகச்சேரி

சின்னத்துரை துரைராசா [அல்லாரை வடக்கு, மீசாலை.] இராசையா தயாநிதி [இராமாவில், கொடிகாமம்.] சுப்பிரமணியம் சடாட்சரம் [கெற்பேலி, கிழக்கு, மிருசுவில்.]

### ஆறுதல் பரிசுகள்

கனகசபை தெய்வேந்திரம் [கில்மன் வீதி, மீசாலை.] குமாரசாமி ஜெயமுருகன் [கிலமன் வீதி, மீசாலை ] காசிநாதர் சிவராசலிங்கம் [இடைக்குறிச்சி, வரணி.] நடராசா நந்தகுமார் [கில்மன் வீதி, மீசாலை.] வல்லிபுரம் வளர்மதி [உசன், மிருசுவில்.] சின்னையா கந்தசாமி [கரும்பைக்குறிச்சி, வரணி.] பாக்கியராஜ் தேவநேசம் [கெற்பேலி கிழக்கு, மிருசுவில்.] தேவநாயகி ராஜகுமாரன் [இடைக்குறிச்சி, வரணி.] பாக்கியம் பெரியதம்பி [வரணி வடக்கு:] இராசம்மா கணேசமூர்த்தி [வரணி வடக்கு ]

### பளை

காசிப்பிள்ளை நிரஞ்சன் (புலோப்பளை வீதி, பளை) கிருஸ்ணன் சின்னாச்சி (மசார் முருகந்த நகர், பளை) நமசிவாயம் சின்னத்துரை (புலோப்பளை வீதி, பளை)

### ஆறுதல் பரிசுகள்

முருகர் நாகமுத்து (முகாவில் உற்வாமிகற்பற்று, இயக்கச்சி) சிதம்பரநாதன் கனகசிங்கம் (மாசார் முருகந்த நகர், பளை) கதிரேசு கங்காதரம் (பேராலை, பளை) வைரமுத்துசெல்வநாயகம்(முகமாலை அம்பழவளை,பளை) சேனாதிராசா செல்வயோகன் (பெரியபளை, பளை) சரவணமுத்து நடராசா (வேம்பொடுகேணி, பளை) சிவக்கொழுந்து சிவபாதம் (தம்பகாமம்,பளை) ஆசீர்வாதம் ஞானாம்பிகை (வேம்பொடுகேணி, பளை) சேனாதிராசா ராசகுமாரி (மாசார், பளை) சின்னர்தணிகாசலம் (முகாவில், இயக்கச்சி!

### நல்லூர்

சிவசுப்பிரமணியம் அருணகிரிநாதன் (கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு) இ. நல்லையா (பலாலி மத்தி, வசாவிளான்) (மஞ்சத்தடி இணுவில்) சிஸ்ரர் வலேரியன் (திரு

[5ஆம் பக்கம்பார்க்க]

## சிந்தனைக்கு

தான் ஏமாற்றப்படுவதற்கு மிக உறுதியான வழி, மற்றவர்களைவிட தான் சாமர்த்தியம் மிக்கவன் என்று எண்ணுவது தான்

-லா ஜோஷ்ஃபுக்கோ

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 14 03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த பெ. எண் 05

## ஆகாயப் புளுகு

கடந்த புதன்கிழமை கொழும்பைக் கலக்கிய குண்டு வெடிப்பை ஒத்த சத்தமானது சீனத்தயாரிப்பான எப்-7 சுப்பசொனிக் ஜெட் விமானத்தில் இருந்து வெளிவந்த ஒலி அதிர்வுகளே என சுமார் 36 மணித்தியாலங்களுக்குப் பின் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சினால் கண்டறியப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெந்தோட்டை கடற்பகுதியின் மீது சுமார் 33 ஆயிரம் அடி உயரத்தில் எப் - 7 சுப்பசொனிக் விமானம் பறந்தது கொண்டிருந்த வேளையில் ஏற்பட்ட ஒலி அதிர்வுகளே பன்மைல் தூரம் கேட்கக்கூடியதாக விருந்தது என்றும், வெடிச்சத்தம் கேட்ட பகுதிக்கு சுமார் 300 துருப்புக்கள் அனுப்பப்பட்டதாகவும் விங் கொமாண்டர் விஜிதா தென்னக்கோன் தெரிவித்தார்.

புதன்கிழமை வெடித்த குண்டுச் சத்தம், கொழும்பின் தென்பகுதியில் இருந்த கட்டடங்களை அதிரவைத்ததாகவும், மக்கள் பீதிகாரணமாக பெரும் அச்சம் அடைந்ததாகவும் கொழும்பில் இருந்து கிடைத்த வானொலி, பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. குண்டுவெடிப்பில் காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் அச் செய்திகள் குறிப்பிட்டன. அத்தோடு, குண்டு வெடிப்பு இடம் பெற்ற இடத்தை தாழப்பறந்து உலங்குவானூர்திகள் தேடுவதாகவும் தெரிவித்தன.

ஆனால் தற்பொழுது இவ் அதிர்வுகள் விமானப் படை விமானத்தில் ஏற்பட்ட ஒலி அதிர்வு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது 33,000 அடிக்கு மேல் ஏற்பட்ட ஒலி அதிர்வினால், கட்டடங்கள் அதிர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது, இதைப் பார்க்கும்போது இலங்கைத் தீவிலுள்ள மக்கள் அனைவரினதும் 'மண்டைக்குள்' ஏதும் இல்லை என்று சிறிலங்கா அரசாங்கம் எண்ணுவதுபோல் தெரிகின்றது. மேலும் கொழும்பில் வாழ்வோருக்கு குண்டுச் சத்தங்களை தொடர்ந்து கேட்காவிடினும், காலத்திற்குக் காலம் கேட்டவர்கள் என்பதையும் அரசாங்கம் மறந்துவிட்டது போல் உள்ளது.

இலங்கை மீது ஜெட் விமானங்கள் பறப்பது இதுதான் முதற்தடவை அல்ல. பலவருடங்களாக வெளிநாட்டு விமானங்கள் பறக்கின்றன. அதிலும் பறப்பவை நான்கு என்ஜின்கள் பொருத்தப்பட்ட பாரிய ஜெட் விமானங்கள் ஆகும். ஆனால் அவை இதுவரை இப்படியான ஓர் ஒலியை எழுப்பியதாக செய்திவெளியாகவில்லை.

மேலும், இவ் ஜெட் விமானங்கள் பல ஆயிரக்கணக்கான அடிகளுக்கு (30,000 அடி, 40,000 அடி) மேல் பறக்கும் போது அவை வெளியிடும் ஒலியானது நிலத்தில் இருப்பவர்களுக்கு கேட்பது மிகவும் குறைவாகும். அவ் ஜெட் விமானங்கள் வெளியிடும் வெண்நிற புகையைக் கொண்டே விமானங்கள் பறப்பதை தரையில் இருந்து அடையாளம் காணக் கூடியதாகவுள்ளது. இந்நிலையில், சிறிய ஜெட் வேவு விமானம் ஒன்று 33,000 அடிக்கு மேல் வெளியிட்ட ஒலி வெடிப்பினால், கொழும்பில் ஒரு பகுதி அதிர்ந்ததென்றால், இது குறித்து எதைக் கூறுவது. அரசாங்கம் எதைக் கூறினாலும் மக்கள் ஏற்க வேண்டும் என்பதையா? அல்லது மக்கள் சிந்திக்கும் தன்மை முற்றாக இழந்து விட்டார்கள் என அரசாங்கம் கருதுவதையா?

குண்டுச்சத்தம் அதிர வைத்ததாக கொழும்பின் தெற்குப் பகுதியில் கல்கிசை, இரத்மலானை, தெகிவல, பிலியந்தல, வேரஹேர-இருந்து சுமார் 35 மைல்களுக்கு அப்பால் உள்ள பெந்தோட்டைப் பகுதியின் கடற்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்ட ஜெட் விமானத்தில் ஒலி அதிர்வு ஏற்பட்டபோது அவை பெந்தோட்டப்பகுதியிலோ அதற்கு சற்று வடக்கேயுள்ள களுத்துறைப் பகுதியிலோ அதிர்வுகளை ஏற்படுத்தாமல் கொழும்பு தெற்கில் அதிர்வுகளை ஏற்படுத்தின என்றால், இதனை எந்தவகையில் கணிப்பிடுவது விங் கொமாண்டருக்கு அப்படியான ஓர் சிந்தனை ஏன் வரவேண்டும் அதிர்வுகளை ஏற்படுத்திய விமானம் கொழும்பு தெற்குப் பகுதியில் பறக்கும்போது ஏற்பட்ட ஒலிவெடிப்பினால், அதிர்வு ஏற்பட்டதென்று கூறின் அந்நேரத்தில் விமானம் ஏதும் பறக்கவில்லையே என மக்கள் கூறிவிடக்கூடும். அவ்வாறானால் மக்கள் சிந்தனையை மட்டுமல்ல கண்ணையும் இழந்துவிட்டதாக வந்துவிடும். இதனைச் சற்று சிந்தித்தே 35 மைலுக்கு அப்பால், 33000 அடி உயரத்தில் பறந்த விமானத்தில், ஏற்பட்ட ஒலி அதிர்வென விங் கொமாண்டர் குறிப்பிட்டுள்ளார்போல் தெரிகிறது.

சிறிலங்கா அரசியல்வாதிகள்தான் இது வரை மக்களை அதிரவைக்கும் அரசியல் ஜோக்குகளையும், புதிய கண்டுபிடிப்புக்களையும் வெளியிட்டு வந்தனர். ஆனால்தற்பொழுது இராணுவ அதிகாரிகளும் அதிர்ச்சியூட்டும் ஜோக்குகளை வெளியிட தொடங்கியுள்ளனர். இது இவர்களின் அரசியல் முயற்சியைக் காட்டுவதாகவே உள்ளது.

# இது சிங்களவருக்குள்ள ஒரே நாடு; இதைப் பிரிக்க அனுமதியோம்

### - காமினி ஜயசூரிய

(கேகாலை)

சிங்களவர்களுக்குள்ள ஒரே நாடு - இந் நாடு. இது சிங்கள நாடு. இதைப் பிளக்கவோ துண்டாடவோ விடமாட்டோம். இனப் பிரச்சினைத் தீர்வுக்கு தொண்டமான் முன்வைத்த யோசனையை ஏற்கமாட்டோம். இது நாட்டைப் பிரிப்பதற்கு சமனாகும். இதை சிங்கள மக்கள் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டும் என்று சிங்கள பாதுகாப்பு இயக்கத் தலைவர் காமினி ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நடைபெற்ற மேற்படி இயக்க கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த பதினொரு வருடகாலமாக நடைபெறும் இந்த யுத்தத்திற்கு ஒரு முடிவே இல்லை நாட்டைக் காப்பாற்றச் சென்ற எமது படையினர் கொல்லப்படுகின்றனர். தொண்டமானின் யோசனையை ஆராயவோ யோசிக்கவோ எமது தலைவர்களுக்கு நேரமில்லை. பத்திரிகை படிக்கக்கூட அவர்களுக்கு நேரமில்லை. அவர்களுக்கு நாட்டைப் பற்றியோ இனத்தைப் பற்றியோ கவலையே இல்லை

சிங்கள பாதுகாப்பு இயக்கம் ஒரு அரசியல் கட்சியல்ல இது சிங்கள மக்களைப் பாதுகாக்கவும் நாட்டைப் பாதுகாக்கவும் அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கவும் உருவாக்கப்பட்ட இயக்கமாகும். சிங்கள, பௌத்த மக்கள் இதன்மூலம் ஒன்றுபடவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# கடும் வரட்சியினாலேயே மின்கட்டண உயர்வு

### - இ: மி: ச: தலைவர் தகவல்

(கொழும்பு)

கடும் வரட்சி காரணமாக மின் உற்பத்தி நிலையங்களின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. இதனால் நாளாந்தம் பத்து மில்லியன் ரூபாவை மின் உற்பத்திக்கென செலவிட வேண்டிய நிலை இலங்கை மின்சாரசபைக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையை ஈடுகட்ட வேண்டியே மின் கட்டணத்தில் இருபத்தைந்து சதவிகித உயர்வு அமுல் படுத்தப்பட்டிருப்பதாக மின்சார சபைத் தலைவர் பெரேரா செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். அவர் மேலும் தகவல் தருகையில் மின் உற்பத்தி செய்யும் நீர்த்தேக்கங்களையும் அவற்றில் தற்போதுள்ள நீரின் அளவையும்விபரித்தார். அதன்படி காசல்றீ நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் நாற்பத்தைந்து அடி நான்கரை அங்குலம் எனவும் மவுசாக்கலை நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் நாற்பத்தி எட்டு அடி எட்டரை அங்குலம் எனவும் கொத்மலைநீர்த்தேக்கத்தில் நூற்றிஇருபத்தேழு அடி ஏழு அங்குலம் எனவும் ரந்தனிகால நீர்த்தேக்கத்தில் ஐம்பத்திநான்கு அடி ஏழு அங்குலம் எனவும் விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நூற்றுப்பதினெட்டு அடி ஏழு அங்குலம் எனவும் தெரிகிறது

மேலும் மார்ச் இறுதிப்பகுதிக்குள் மழைபொழிய ஆரம்பிக்காவிட்டால் மின்வெட்டு அமுல்படுத்தவேண்டிய நிலை வரும் எனவும் அவர் குறிப்பிட்டார்

## கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் வாராந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த வார அமர்வில் ஏ வி. மாணிக்கம் அவர்கள் ''எனது பத்திரிகைத்துறை அனுபவம்'' என்ற பொருளில் கலந்துரையாற்றுவார்.

# வதிவிட வேளாண்மை

(4ஆம் பக்கத்தொடர்ச்சி)

க்குடும்பக் கன்னியர் மடம், பாஷையூர்)

### ஆறுதல் பரிசுகள்

நாராயணசாமி விவேகானந்தன் (348, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை) தர்மலிங்கம் ஜெகதீசன் (இளையதம்பி வீதி, அரியாலை) பொன்னம்பலம் லோகநாதன் (பொற்பதி வீதி கொக்குவில்) சின்னையாசெல்வரட்ணம் (முரளி வீதி, அரியாலை) மு. ஜெகதீசன் (144, சந்தோசம் வீதி, அரியாலை) வை. ரூபாகரன் (62/2 கந்தர் மணியம் வீதி) பொ. அருட்திரு (அமல உற்பவம், கொழும்புத்துறை) கனகசபை பற்குணநாதன் (164/9 கச்சேரி நல்லூர் வீதி) க உருத்திரகுமார் (150/3, பலாலி றோட், கோண்டாவில்) பா. ஜெனனி (250, சந்தோசம் வீதி, அரியாலை)

### உரும்பிராய்

சோமசுந்தரம் எழிலன் (உரும்பராய் கிழக்கு) மாணிக்கம் இரத்தினமலர் (திருவெண்ணாமலை, நீர்வேலி தெற்கு) செல்லையா உதயகுமார் உரும்பராய் கிழக்கு)

### ஆறுதல் பரிசுகள்

பண்டாரி வேலுப்பிள்ளை (நீர்வேலி தெற்கு) பாலகிருஷ்ணன் வசந்தன் (அன்னங்கை உரும்பராய் மேற்கு) கந்தையாபிள்ளை சிவானந்தி (திருவெண்ணாமலை (நீர் வேலி தெற்கு) சின்னத்தம்பி வைத்திலிங்கம் (நீர்வேலி தெற்கு) செல்லையா பத்மநாதன் (குளிக்கண்டி ஒழுங்கை, கோப்பாய்தெற்கு) தடசாயினிமகேந்திரன் (ரெம்பிள் வியூ உரும்பராய் கிழக்கு) கந்தன் முத்தன் (ஆனந்தபுரன் கோப்பாய் தெற்கு) சின்னத்தம்பி சேனாதிராசா (திருவெண்ணாமலை நீர்வேலி தெற்கு) கந்தையா பத்மநாதன் (உரும்பராய் வடக்கு உரும்பராய்) தம்பிமுத்துபரமானந்தம் (அன்னங்கை உரும்பராய் மேற்கு)

### கீரிமலை

ரஞ்சனா கனகரட்ணம் (இம்புலாலை அளவெட்டி மேற்கு) குகனேசராசா தவமணிதேவி (துன்மனை இளவாலை மத்தி, இளவாலை) சீ. கந்தையா (கல்லூரி வீதி, இளவாலைவடக்கு)

### ஆறுதல் பரிசுகள்

ஆனந்தஜோதி சபாரத்தினம் (சீனன்கலட்டி, அளவெட்டி) அம்பலம் தம்பிராசா (அரசடி அளவெட்டி மேற்கு) கந்தையா சுப்பிரமணியம் (அம்பனை, தெல்லிப்பளை) விஜயரட்ணம்தாரணி (டச் றோட் அளவெட்டி) லோ. மரியநாயகம் (அலுக்கை அளவெட்டி கிழக்கு) தம்பையா பழனிவேலு (மனுவல் வளவு, அளவெட்டி) பாலசுப்பிரமணியம் சிவரூபன் (கொட்கோடலை தெல்லிப்பளை) வைரமுத்து சிவாஜினி (பெத்தாவளை அளவெட்டி மத்தி) சோமசுந்தரம் மோகனதாஸ் (நூங்கைப்புலம், அளவெட்டி) கணேசமூர்த்தி பேராதரன் (ஆனைக்குட்டிஒழுங்கை தெல்லிப்பளை.)

### தொல்புரம்

சு. விக்னேஸ்வரன் (வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை) ச. இரத்தினசிங்கம். (பற்றிமா வீதி பிரான்பற்று.) சி. சிவசிதம்பரம் (சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.)

### ஆறுதல் பரிசுகள்

சீ. பூமாதேவி (கலாபவனம், சங்கானை ) சி. குகதாசன் தேவாலய வீதி சங்கானை.) வி. புருசோத்மன் (காளுவன் சந்தி, சுழிபுரம்.) செ பாலசுப்பிரமணியம் (கார்த்திகை வாசா, வட்டுக்கோட்டை.) அந்தோனி ஜோட்ஸ் (அந்தோனியார் வீதி, பண்டத்தரிப்பு.) இ. சிவகரன் தங்கோடைவீதி, வட்டுக்கோட்டை.) சி. பாக்கியலட்சுமி (வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.) ஆ. நகுலேஸ்வரி மூளாய்தெற்கு சுழிபுரம் ) பொ. நாகலிங்கம் பண்ணாகம்.) ம. முகிலன் (டச்சுறோட், சித்தன்கேணி.)

### புத்தூர்

தங்கேஸ்வரிகந்தையா (ஆவரங்கால் மேற்கு, நவக்கிரி.) முத்துத்தம்பி ஜெயரட்ணம் (ஆவரங்கால்மேற்கு புத்தூர்.) அரசரட்ணம் நிரஞ்சன் (கருணாகரன் வீதி, அச்செழு.)

### ஆறுதல் பரிசுகள்

பதமாவதி தியாகராசா [முரளி வீதி, ஆவரங்கால்.] குகரஞ்சினி சின்னத்துரை [நவக்கிரி, புத்தூர் மேற்கு ] விநாயகமூர்த்தி சகாதேவன் [ராஜ வீதி. தோப்பு, அச்சுவேலி.] விமலாதேவிஆறுமுகம் [புத்தூர் வடக்கு, புத்தூர்.] நீலன் மார்க்கண்டு (நவக்கிரி மேற்கு புத்தூர்.) கனகசபாரட்ணம் தயானந்தி [நரசிங்கரி வீதி, அச்செழு.] த. சிவகௌரி (சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.) கந்தர் முருகேசு (புத்தூர் கிழக்கு, புத்தூர்.) பாலசிங்கம்கருணானந்தம் (ஏரத்தனை, புத்தூர் வடக்கு) கோபாலசிங்கம் சிறிஸ்கந்தராசா (அச்செழு, நீர்வேலி.)

### உடுவில்

த. குமாரசாமி [அம்பன்வீதி, உடுவில்வடக்கு.] இராசையா தம்பிரத்தினம் [சுன்னாகம் தெற்கு.] இ. வசந்தரூபன் [பிள்ளையார் வீதி, இணுவில் கிழக்கு.]

### ஆறுதல் பரிசுகள்

ஜ. எட்வின் றோஸ்மேரி (மானிப்பாய் கிழக்கு.) ஆறுமுகம் பூலோகநாதன் (ஆறுமுகம் வீது, கந்தரோடை.) கந்தவனம் பாலகிருஸ்ணன் (ஏழாலை கிழக்கு.) த. ஜெகநாதன் மாணிக்கன் ஒழுங்கை, இணுவில்கிழக்கு )தே. கணேஸ் (கனகசபை வீதி, மானிப்பாய் தெற்கு.) வைரவநாதன் சின்னத்தம்பி (சுன்னாகம் மேற்கு ) இ. இராசலிங்கம் (கேலன்கமம் வீதி, மானிப்பாய் மேற்கு) சின்னத்தம்பி கோபால் (கீரிமலை றோட், சண்டிலிப்பாய்) அப்பாக்குட்டி செல்வராசா (கச்சாலடி, சுன்னாகம்தெற்கு) மு. கணேசமூர்த்தி [தியேட்டர் ஒழுங்கை, இணுவில் வடகிழக்கு)

# செலாவணிக் கட்டுப்பாட்டு விதி தளர்த்தப்பட்டதாக அறிவிப்பு

(கொழும்பு)

செலாவணிக கட்டுப்பாட்டு விதிகள் தளர்த்தப்பட்டு இவை உடனடியாக அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த தகவலை மத்திய வங்கி ஆளுநர் கருணதிலக தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் வெளியிட்டுள்ள தகவல்களில் வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொள்ளும் ஒருவருக்கு இதுவரை அனுமதிக்கப்பட்டிருந்த 2500 அமெரிக்க டாலர்கள் வருடமொன்றிற்கு 5000 டாலர்களாக அதிகரிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி தொடர்பாக வெளிநாடு செல்லும் ஒருவருக்கு அனுமதிக்கப்பட்டுவந்த செலாவணிக் கட்டுப்பாடு முற்றாக நீக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆரம்பக் கல்வி, உயர் கல்வி உட்பட சகலவிதமான கல்விகளுக்கும் செலாவணி அனுமதிக்கப்படும்.

வெளிநாட்டில் சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்ள பெறப்பட்ட காப்புறுதிக் கட்டணங்களை செலுத்த வெளிநாட்டு செலாவணி அனுமதிக்கப் படும் இதன் மூலம் வெளிநாடுகளில் வைத்தியச் செலவுகளை செலுத்தலாம்.

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து செல்வோரின் மூலதன மாற்றங்கள் தனியொருவருக்கு மூன்று இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. குடும்பமொன்றிற்கான மூலதன மாற்றங்கள் ஏழு இலட்சம் ரூபாவிலிருந்து பத்து இலட்சம் ரூபாவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் விளக்கினார்.

பாடசாலைகள் சுவிகரிப்பு

## மாணவர் சமய விகிதாசாரம் பேணப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தால் சுவிகரிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு மாணவரை அனுமதிக்கும் போது, அப்பாடசாலை சுவிகரிக்கப்பட்ட வேளையில் இருந்த மாணவர்களின் சமய விகிதாசாரத்துக்கு ஏற்ப மாணவர்களைச் சேர்த்தல் வேண்டும் என்று கல்வி, உயர் கல்வி அமைச்சு சிரேஷ்ட உதவிச் செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

அதிகமான அதிபர்களினால் இவ் விகிதாசாரத்துக்கமைய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்ற முறைப்பாடு ஜனாதிபதிக்குக் கிடைத்ததைத் தொடர்ந்தே மேற்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

சுவிகரிக்கப்பட்ட சமயத்தில் நிலவிய சமய விகிதாசாரத்துக்கு அமையப் பள்ளிக்கூடங்களில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல் சட்ட ரீதியாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளமையினால், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்குமாறு சிரேஷ்ட உதவிச் செயலாளரினால் சம்பந்தப்பட்ட அதிபர்கள் பணிக்கப் பட்டுள்ளார்கள்.

யாழ். மாவட்ட

## விளையாட்டு அபிவிரு. குழு உதைபந்தாட்ட போட்டிகள்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் யாழ். மாவட்ட ரீதியாக நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகின்றது. இன்றைய வலிகிழக்கு பிரிவிற்கான ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன்விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மோதுகின்றது. யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் பி ப 3.00 மணிக்கு இன்றைய போட்டிகள் ஆரம்பமாகும்.

இரகசியப் பொலிஸ் போர்வையில்

## தங்கச்சங்கிலிகள் கொள்ளை இரு இளைஞர்கள் கைது

(கொழும்பு)

இரகசியப் பொலிஸ் என்ற போர்வையில்தங்கச்சங்கிலிகள் கொள்ளையிட்ட இரு இளைஞர்கள் கொழும்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தம்மை இரகசியப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக்கொண்டு வீடுகளுக்குள்புகுந்து ஆயுதங்களைத் தேடுகிறோம் என்ற போர்வையில் தங்க நகைகளையும் சங்கிலிகளையும் கொள்ளையிட்டவர்கள் பற்றி கம்பகா, சீதுவை பகுதி மக்கள் கொடுத்த முறைப்பாட்டையடுத்து இரு இளைஞர்கள் சீதுவைப் பொலிசாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடுதல் பொருள் வழங்கல்

இன்றுமுதல் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடுதலான அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்க யாழ். செயலகம் முன் வந்துள்ளது.

கூடுதல் உணவுப் பொருள்கள் கையிருப்பில் இருப்பதால் அரிசி, மா ஆகியவற்றை பொதுமக்கள் தேவையான அளவு பெற்றுக் கொள்ளலாம் எனவும் சீனி கையிருப்பில் உள்ளதைப் பொறுத்து விநியோகிக்கப்படும் எனவும் செயலகம் அறிவித்துள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற இது தொடர்பான கூட்டம் ஒன்றில் உதவி கூட்டுறவு ஆணையாளர், சங்க முகாமையாளர்கள் கலந்துகொண்டனர்.

இதில் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்ய சங்கங்களுக்கு கடன்வசதி செய்து கொடுக்கப்படும் எனவும் இக்கடனை சங்கங்கள் இரண்டு வாரங்களில் மீளச் செலுத்த வேண்டும் எனவும் அரசாங்கஅதிபர்தெரிவித்தார்

இதேவேளை தனியார் வர்த்தக நிலையங்கள் தமக்குத் தேவையான உணவுப்பொருள்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்று விற்பனை செய்யலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்று யாழ். செயலகத்தினால் இப் பொருள்களுக்கான புதிய கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்படவுள்ளது. (ச)

### களத்தில்

யாழ். மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன் தலைமையுரை நிகழ்த்துவார். வரவேற்புரையை போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர்தமிழன்பனும் (ஜவான்) வெளியீட்டுரையை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்துவர்.

சிறப்புரைகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலதிபர் யோகரத்தினம் யோகி, கடற்புலிகளின் தளபதி சூசை, யாழ். மாவட்ட மகளிர் முன்னணி ஆர்த்தி, மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் பிரதிப் பொறுப்பாளர் கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் ஆகியோர் நிகழ்த்துவர்.

நன்றியுரையினை யாழ். மாவட்ட தாக்குதல் பிரிவு எழில்அரசன் [பாப்பா] ஆற்றுவார். இந்த ஒலிப்பதிவு நாடாவில் பாடியவர்களே நேரில் வந்து இந்த விழாவில் பாடுவார்கள்.

### இருவாரம்

இரண்டு வாரக் கட்டாய விடுமுறை வழங்கப்பட உள்ளது.

இந்த விடுமுறையை ஒவ்வொரு ஊழியராக இரண்டு வார விடுமுறை எடுத்துக் கொள்ளலாம் எனவும் தெரியவருகின்றது. (75)

### கிறிஸ்தவ

போதிலும் வவுனியா இராணுவ அதிகாரி சில பொருள்களை வடக்கிற்கு கொண்டுவர தடைவிதித்தல், மருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு அவற்றைக் கொண்டுவரும் வழிகள் போன்ற பிரச்சினைகள் பற்றி விளக்கியதாக தெரியவருகிறது. (ச)

## தொண்டர் ஆசிரியர் அவசரக்கூட்டம்

அனைத்து தொண்டர் ஆசிரியர்களுக்குமான அவசர கூட்டம் ஒன்று நாளை காலை 9 30 மணிக்கு யாழ். பட்டப் படிப்புகள் கல்லூரியில் நடைபெற உள்ளது: இக் கூட்டத்திற்கு தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரும்படி தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் செல்வி மாலா கேட்டுள்ளார். (க)

## நிகழ்ச்சிகள் ரத்து

யாழ். கல்வித்திணைக்களத்தினால் பாடசாலைகளில் ஒழுங்கு செய்யப்பட்ட நாளைய நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இந் நிகழ்ச்சிகள் நடைபெறும் திகதி பற்றி கோட்டரீதியாகப் பின்னர் அறிவிக்கப் படும். இதுபற்றிய சுற்று நிருபம் அனைத்துப்பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

### 100 இலங்கைத்

வருகிறது.

நோர்வேயிலிருந்து வெளியாகும் தினசரியொன்று வெளியிட்டுள்ள இத் தகவலில் மேலும் நடராசா சுபாஸ்கரன் (24 வயது) என்பவரின் கூற்றுப்படி இலங்கையிலிருந்து சுமார் 5000 - 6000 டாலர்கள் கொடுத்து ஒரு வழிப் பயணத்திற்கான விமானடிக்கட்டுடன் புறப்பட்ட இவர்கள் யூகோசெலவாக்கியா வந்து அங்கிருந்து அல்பேனியா வந்து சேர்ந்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

### டாக்டர்

தனது யோசனைகள் பற்றி நேரில் ஆஜராகி விளக்கமளிக்க மறுப்புத்தெரிவித்துள்ளார் வாய்மூல விளக்கமளிக்க பாராளுமன்ற தெரிவுக் குழுவினால் அழைக்கப்பட்ட ஒரே ஒரு தனி நபர் டாக்டர் சிவகுமாரன் ஆவரே என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழர்

விளைந்த நெல்லை சிறிலங்கா இராணுவத்தினர் பறித்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை பொலநறுவ மட்டக்களப்பு எல்லைப்புறப் பகுதியில் செய்கை பண்ணப்பட்ட நெல் பொலநறுவைப் பகுதிக்கு உரியது என அங்குள்ள அரச அதிகாரிகள் கூறியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## நெசவுக் கைத்தறியாளர்கள் யாழ். அரச அதிபர் சந்திப்பு

யாழ். மாவட்ட நெசவுக் கைத்தறியாளர்கள் நேற்று யாழ். அரசாங்க அதிபரைச் சந்தித்துதமக்குள்ளபிரச்சினைகள் பற்றி எடுத்துரைத்தனர். கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் தமது தறிகள் பல சேதமடைந்துள்ளதாகவும் மூலப்பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாயும் இவற்றைப் பெற்றுத் தருவதற்கான சகல நடவடிக்கைகளையும்மேற்கொள்ளுமாறும் அவர்கள் யாழ். அரச அதிபரைக் கேட்டுக் கொண்டனர். [ச]

உலக கிண்ண கிரிக்கட்

## சிறிலங்கா அணி தோல்வி அரையிறுதிவாய்ப்புஇல்லை

(மெல்போன்)

அவுஸ்திரேலியாவில் நேற்று நடைபெற்ற உலககிண்ண கிரிக்கட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி சிறிலங்கா அணியை 91 ஓட்டங்களால் தோற்கடித்தது. மேற்கிந்திய தீவுகள் அணி 50 ஓவர்களில் எட்டு விக்கட் இழப்பிற்கு 268 ஓட்டங்களை எடுத்தது. சிறிலங்கா அணி 50 ஓவர்களில் ஒன்பது விக்கட்டுகள் இழப்பிற்கு 177 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இந்த தோல்வியினால் சிறிலங்கா அணி அரையிறுதியாட்டத்தில் பங்குபற்றும் வாய்ப்பை முற்றாக இழந்துள்ளது

## சிப்பாய்க்கும் மகளுக்கும் கத்திக்குத்து; துப்பாக்கிச் சூடு

(மாத்தறை)

சிறிலங்கா இராணுவ கெமுனுப் பிரிவைச் சேர்ந்த டி. பி. விதானகேயும் அவரது மகள் ரஞ்சினி ஹேரத்தும் இனந்தெரியாத இரு நபர்களால் கத்தியினால் குத்தி துப்பாக்கியினால் சுடப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் பலத்த காயங்களுடன் மாத்தறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் என்று வெலிகம பொலிசார் தெரிவித்துள்ளனர்

வெலிகம பொலிஸ் பகுதியிலுள்ள சுல்தானா கொட அகுளுகொட என்ற இடத்தில் இராணுவ வீரர் மகளுடன் வீட்டிலிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர்கள் இருவரையும் துப்பாக்கியினால் வெடி வைத்து கத்தியினால் குத்திச் சென்றுவிட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## சோவியத் யுத்தக் கப்பல்கள் ஏலத்தில் விற்பனை

முன்னாள் சோவியத் யூனியனின் ஆயுதங்கள் ஸ்பெயினின் வடகிழக்கு எல்லையில் உள்ள இராணுவத் தளமொன்றில் ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக பத்திரிகைச்செய்தியொன்று தெரிவிக்கின்றது.

ஸ்பானிஸ் ரஷ்ய அதிகாரிகளின் அனுமதியுடன் உள்ளூர் வர்த்தகர்கள் இந்த ஏல விற்பனையை ஒழுங்கு செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது,

மத்திய கிழக்கு நாடுகள் பேரத்தின் மூலம் இவற்றை வாங்குவதில் சிரத்தை காட்டி வருகின்றன.

தாக்குதல் ஹெலிகொப்டரொன்று 20 இலட்சம் டாலருக்கும் சண்டை விமானம் 40 இலட்சம் டாலருக்கும் வாங்கக் கூடியதாக இருக்கும்.

யுத்தக் கப்பல்கள் கூட விற்பனைக்கு வருவதாக மேலும் கூறப்படுகிறது.

## யாழ் - வந்து திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

'போரூட்' நிறுவன அதிகாரிகள் நால்வர் இரண்டு நாள் விஜயமாக கடந்த புதனன்று யாழ்ப்பாணம் வந்தனர், இவர்கள் தமது நிறுவனத்தின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலைகள், வேலைத்திட்டங்களைப் பார்வையிட்ட பின் நேற்று முன்தினம் கொழும்பு திரும்பியுள்ளனர். (75)


ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 4.00, 6.00 மணிக்கும்

காண்பிக்கப்படுகின்றது

FIVE FOR HELL

(நரகத்திற்கு ஐவர்)

(தமிழ் விளக்கம் செய்யப்பட்டது)

[சி/4011]


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.